**அசல் வழக்கு எண்.14/2020**

01.07.2025

**பெயர் – ஜெயந்தி** (DW1)

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) 2ம் பிரதிவாதி பொன்மணி எனக்கு அண்ணி ஆவார். ஜெயக்குமாரி தென்வடல் பூமி தன்னுடையது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்னுடைய பாகத்திற்கு எந்த திசையில் உள்ள நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எல்லா நிலங்களும் பொதுவில் சரிபாதி தான் பாத்தியம். எனக்கு 1 ஏக்கர் 52 ¼ செண்ட் பாத்தியம் ஜெயக்குமாரிக்கு 1 ஏக்கர் 52 ¼ செண்ட் பாத்தியம் அவரது அண்ணன் கோபால்சாமி வகையராவுக்கு 1 ஏக்கர் 52 ¼ செண்ட் பாத்தியம். 2ம் பிரதிவாதி பொன்மணிக்கு 1 ஏக்கர் 52 ¼ செண்ட் பாத்தியம். மொத்தம் உள்ள 6 ஏக்கர் 9 செண்டில் எனக்கும், பொன்மணிக்கும் 3 ஏக்கர் 4 ½ செண்ட் பாத்தியம். மீதி 3 ஏக்கர் 4 ½ செண்ட் ஜெயக்குமாரி மற்றும் கோபால் சாமி வகையராவுக்கு பாத்தியம். எங்களுடைய 3 ஏக்கர் 4 ½ செண்ட் வடபுறமாகவும் ஜெயக்குமாரி பாகம் தென்புறமாகவும் உள்ளது என்றால் சரியல்ல.

(2) 6 ஏக்கர் 9 செண்ட் நிலமும் பொதுவில் தான் உள்ளது. 6 ஏக்கர் 9 செண்டில் பாகம் கேட்டு நானும், பொன்மணியும் மாண்பமை உடுமலை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் மேல்முறையீடு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இரண்டாவது மேல்முறையீடு செய்துள்ளோம். இரண்டாவது மேல்முறையீடு சம்மந்தமாக ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(3) இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள விவரப் பத்திரிக்கை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் தெரியும். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரை மற்றும் ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்து சர்வே எண் 497 என்பது சர்வே எண்கள் 497/A மற்றும் 497/B என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் உட்பிரிவு செய்யப்படவில்லை. சர்வே எண் 497 என்பது சர்வே எண்கள் 497/A மற்றும் 497/B என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாக

வாதி தரப்பில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை.

தாவாச் சொத்து பொதுவில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்